திருச்சிராப்பள்ளி ஸ்ரீ ஐயப்ப சங்கம்.
வாரம் ஒரு நீதிக்கதை - 4.1.2026

## எனக்கு எதற்கு ஐயனே வரம்..!

முனிவர் ஒருவர் மரத்தடியில் அமர்ந்து தன் வேட்டியிலிருந்த கிழிசலைத் தைத்துக் கொண்டு இருந்தார். அவர் ஒரு எளிமையான சிவபக்தர்.

அப்போது சிவபெருமானும் பார்வதிதேவியும் வான்வெளியில் வலம் வந்து கொண்டிருந்தனர். மரத்தடியில் ஒளிப்பிழம்பாய் அமர்ந்திருந்த முனிவரை கண்டதும் உளம் நெகிழ்ந்த அம்மை ஐயனைப் பார்த்து "மரத்தடியில் பார்த்தீர்களா?" என்றாள்.

"பார்த்தேன்" என்றார் பரமன்.

"பார்த்த பிறகும் சும்மா எப்படி போவது? ஏதேனும் வரம் கொடுத்து விட்டுப் போகலாம், வாருங்கள்" என்றாள் அம்மை.

"அட... அவர் அந்த நிலையெல்லாம் கடந்தவர். இப்போது அவரிடம் செல்வது வீண் வேலை. வேண்டாம் வா.. நம் வழியே போகலாம்" என்றார் சிவ பெருமான்.

ஆனால், பார்வதிதேவி விடவில்லை. ஐயனை வற்புறுத்தி மரத்தடிக்கு அழைத்து வந்து விட்டாள்.

"வணக்கம் முனிவரே" என வணங்கினர் அம்மையும் அப்பனும்.

முனிவர் நிமிர்ந்து பார்த்தார். " அடடே எம்பெருமானும், பெருமாட்டியுமா... வரணும்.. வரணும்... என்று வரவேற்றார் முனிவர்.

தாகத்திற்கு மோர் கொடுத்து உபசரித்தார்.

அவ்வளவுதான். மீண்டும் கிழிசலைத் தைக்க தொடங்கி விட்டார்.

சற்று நேரம் பொறுமையாக காத்திருந்துவிட்டு, "சரி நாங்கள் விடைபெறுகிறோம்" என்றனர் அம்மையும் அப்பனும்.

"மகிழ்ச்சியாய் போய் வாருங்கள். வணக்கம்" என்று சொல்லிவிட்டு மீண்டும் கிழிசலைத் தைக்க முனைந்தார் முனிவர்.

அம்மை குறிப்பு காட்ட ,அப்பன் பணிவாய் கேட்டார்...

"முனிவரே...நாங்கள் ஒருவருக்குக் காட்சி கொடுத்து விட்டால், வரம் கொடுக்காமல் போவதில்லை. எனவே, தாங்கள் ஏதாவது வரம் கேளுங்கள். கொடுக்கிறோம்" என்றார்.

முனிவர் சிரித்தார். "வரமா..! உங்கள் தரிசனமே எனக்கு போதும். வரம் எதுவும் வேண்டாம். உங்கள் வழியை தொடருங்கள்" என்று சொல்லிவிட்டு பணியில் ஆழ்ந்தார்.

அப்பனும் அம்மையும் விடவில்லை. "ஏதாவது வரம் கொடுக்காமல் செல்ல மாட்டோம்" என்று பிடிவாதமாய் நின்றனர்.

*முனிவர் வேறு வழியின்றி  கேட்டார்...*

*"நான் தைக்கும் போது, இந்த ஊசிக்குப் பின்னாலேயே நூல் போக வேண்டும். அது போதும்.." என்றார்.*

*இதைக் கேட்ட அம்மையும் அப்பனும் திகைத்தனர்.*

*"ஏற்கனவே ஊசிக்கு பின்னால்தான் நூல் போகிறதே. இதற்கு நாங்கள் ஏன் வரம் தர வேண்டும்?" என்று அம்மை  பணிவாய்  கேட்டாள்.*

*"அதைத்தான் நானும் கேட்கிறேன். நான் ஒழுங்கு தவறாமல் என் கடமையைச் செய்து வந்தால்.. வரவேண்டிய பலன் நியதிப்படி தானாகப் பின்னால் வருமே... இடையில் நீங்கள் எதற்கு எனக்கு வரம் தர வேண்டும்?"  என்று கேட்டார் முனிவர்.*

*முனிவரின் விளக்கத்தை கேட்ட அம்மையும் அப்பனும் சிரித்து விட்டு, மகிழ்ச்சியாய் தமது வழியே சென்றனர்.*

*தன்னுடைய கடமையை ஒழுங்கு தவறாமல், அடக்கமாகச் செய்யும் எளிமையான நாமுமே  ஒரு விதத்தில் அந்த முனிவர் போலவேதான்.*

* * *